சுருக்கம்

வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – இராணிப்பேட்டை மாவட்டம் – ஆற்காடு வட்டத்தைப் பிரித்து கலவையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.1(1) பிரிவு

அரசாணை (நிலை) எண்.481 நாள்: 31.12.2019

விகாரி வருடம், மார்கழி 15,
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்[வ.நி.1(1)] துறை, நாள் 9.6.2003.
2. மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை அவர்களின் கடித எண்.ஜி1/ 02/2019, நாள் 13.12.2019.
3. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.பணி3(4)/ 31678/2017, நாள் 16.12.2019.

*********

ஆணை:–

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் தனது கடிதத்தில், இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆற்காடு வட்டத்தைப் பிரித்து கலவையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது குறித்த முன்மொழிவு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில், புதிய வருவாய் வட்டம் பிரிப்பது குறித்த நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகின்றன எனவும், புதியதாக உருவாக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் கலவை வட்டத்திற்கான பரப்பளவு 207.26 ச.கி.மீ., குறைந்தபட்ச மக்கள் தொகை 1,00,000 என்ற அளவுகோலுக்கு குறைவாக 78773 (2011–ம் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) உள்ளன எனவும், இது தற்போது 9 வருடங்களை கடந்துள்ளதால், தோராயமாக 90,000 முதல் 1,00,000–ற்குள் இருக்கும் வாய்ப்புள்ளது என்றும், மேற்படி உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வட்டத்திற்கு மீதமுள்ள அனைத்து அளவு கோல்களும் பூர்த்தியடையும்படி அமைந்துள்ளது எனவும், தற்போதுள்ள தலைமையிடத்திலிருந்து கலவையில் உள்ள கிராமங்கள் தொலைவில் உள்ளதாலும், நிருவாக நலன் கருதியும், மேலும் வட்டப்பிரிவினைக்குப் பின் எஞ்சிய ஆற்காடு வட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகின்றன எனவும், ஆதலால் ஆற்காடு வருவாய் வட்டத்தைப் பிரித்து, இரண்டு வருவாய் குறுவட்டங்களுடன் 50 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய கலவை புதிய வருவாய் வட்டத்தினை உருவாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

//த.பி.பா.//

2. மேலும், புதியதாக உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ள கலவை வருவாய் வட்டத்திற்கு மொத்தமுள்ள 38 பணியிடங்களில் மறுபரவலமர்த்தல் அடிப்படையில் 15 பணியிடங்களுக்கும், புதிதாக தோற்றுவிப்பதன் அடிப்படையில் 23 பணியிடங்களை உருவாக்கலாம் என்றும், மேலும், புதிதாக உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ள கலவை வருவாய் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.1,88,20,120/– மற்றும் தொடரா செலவினம் ரூ.20,37,000/– ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

3. முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோர்களின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(i) இராணிப்பேட்டை மாவட்டத்தில், ஆற்காடு வருவாய் வட்டத்தைப் பிரித்து கலவை மற்றும் மாம்பாக்கம் ஆகிய இரண்டு குறுவட்டங்களுடன் 50 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய கலவை புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்படவுள்ள கலவை வருவாய் வட்டத்திற்கு மொத்தமுள்ள 35 பணியிடங்களில் 14 பணியிடங்களை மறுபரவலமர்த்தல் மூலமும், 21 பணியிடங்களை புதியதாக உருவாக்குவதன் மூலமும் தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்கப்படவுள்ள கலவை வருவாய் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.35,37,650/– (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) மற்றும் தொடரா செலவினம் ரூ.20,96,000/– (ரூபாய் இருபது இலட்சத்து தொன்னூற்றாறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது (இணைப்பு–III-இல் உள்ளபடி).

(iv) தொகுப்பு கிராமங்களை பிரித்து புதியதாக தொகுப்பு கிராமங்களை உருவாக்குதல் தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிமுறைகள், சட்டம் மற்றும் அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(v) இரவுக் காவலர், மசால்சி, புல உதவியாளர் போன்ற பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண்.49, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, நாள் 14.5.2002–இன்படி வெளிமுகமை (outsourcing) மூலமாக ஒப்பந்த (contract) அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vi) அலுவலக உதவியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அடிப்படைப்பணிக்கான சிறப்பு விதிகளில், விதி–4(a) (நியமனம்)–ஐயும், அரசாணை (நிலை) எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.03.2015–ஐயும் உடன் நிகழ்வாக பின்பற்றப்படுவதுடன், நடைமுறையில் உள்ள உரிய விதிகள் / சட்டம்/ அரசாணைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

(vii) மறுபரவலமர்த்தல் மூலம் ஆற்காடு வருவாய் வட்டத்திலிருந்து கலவை வருவாய் வட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள், அப்பணியிடங்களுக்குரிய தளவாடங்களுடன் கலவை வருவாய் வட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(viii) ஏற்கனவே உள்ள வட்டங்களில், வட்டப் பிரிவினைக்குப்பின் உள்ள பணியிடங்கள் பொதுவான பணியாளர் மாதிரியில் (Generalized Staff Pattern) வரையறுத்துள்ளவற்றிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அவ்வாறு மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட பணியிடங்கள் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் அல்லது தேவைப்படும் இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், புதிய வருவாய் வட்டம் துவக்கப்பட்டவுடன் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வைக்கப்பட வேண்டும். அப்பணியிடங்களுக்கு சம்பளம் பெற்று வழங்கக் கூடாது.

(ix) அலுவகத்திற்கான வாடகை பொதுப்பணித்துறை பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பெற்று வழங்க வேண்டும்.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**I** <u>பணியாளர் சம்பளங்கள்</u>

சம்பளம் மற்றும் தகுதியுள்ள பிறபடிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மறுபரவலமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு கீழக்கண்ட கணக்குத் தலைப்பு / உப தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

(i) <u>வருவாய் பணியிடங்கள்</u>

**2053–00** மாவட்ட நிருவாகம் **– 094** ஏனைய பணியாளரமைப்பு **–**மாநிலச் செலவினங்கள் **–AB** வட்டப் பணியாளரமைப்புகள் **– 301** சம்பளங்கள்
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 0102)
[IFHRMS DPC 2053 00 094 AB 30100]

(ii) <u>தேர்தல் பணியிடங்கள்</u>

**2015–00** தேர்தல்கள் **– 102** தேர்தல் அதிகாரிகள் **–** மாநிலச் செலவினங்கள் **–AA** சட்டப்பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகள் **– 301** சம்பளங்கள்
பழைய (த.தொ.கு 2015 00 102 AA 0101)
[IFHRMS DPC 2015 00 102 AA 30100]

(iii) <u>நில அளவைப் பணியிடங்கள்</u>

**2029–00** நில வருவாய் **– 102** நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் **–** மாநிலச் செலவினங்கள்**–AF** நில அளவை பராமரிப்பு பணி **–301** சம்பளங்கள்
பழைய (த.தொ.கு 2029 00 102 AF 0105)
[IFHRMS DPC 2029 00 102 AF 30100]

(iv) <u>குடிமைப் பொருள் பணியிடங்கள்</u>

**3456–00** நுகர்பொருள் வழங்கல் **– 001** நெறிப்படுத்துதலும் நிருவாகமும் **–** மாநிலச் செலவினங்கள் AB மாவட்ட பணியாளரமைப்பு **– 301** சம்பளங்கள்
பழைய (த.தொ.கு **3456 00 001 AB 0108**)
[IFHRMS DPC 3456 00 001 AB 30100]

//த.பி.பா.//

**II 2053–00** மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 305 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசிக் கட்டணங்கள் ரூ.30,000/–
தொடரும் செலவினம் ரூ.24,000/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 0513)
[IFHRMS DPC 2053 00 094 AB 30501]

(ஆ) 305 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.72,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 0531)
[IFHRMS DPC 2053 00 094 AB 30503]

(இ) 305 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன்கள் ரூ.4,00,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 0559)
[IFHRMS DPC 2053 00 094 AB 30505]

(ஈ) 306 வாடகை; கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
(பொதுப்பணித்துறையின் இறுதி திட்ட மதிப்பீட்டிற்கு உட்பட்டது)
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 0611)
[IFHRMS DPC 2053 00 094 AB 30601]

(உ) 319 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,10,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 1914)
[IFHRMS DPC 2053 00 094 AB 31901]

(ஊ) 321 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.14,00,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 2119)
[IFHRMS DPC 2053 00 094 AB 32101]

(எ) 345 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 4500)
[IFHRMS DPC 2053 00 094 AB 34501]

(ஏ) 376 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,80,000/–
பழைய (த.தொ.கு 2053 00 094 AB 7614)
[IFHRMS DPC 2053 00 094 AB 37601]

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணியாகும் (New Service). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–இன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் வட்டம் 31.12.2019–ஆம் நாள் முதல் செயல்படும்.

7. கலவை புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இந்த அரசாணை நிதித்துறையின் கோ.எண்.66121/நிதி(வருவாய்)/2019, நாள் 30.12.2019 மற்றும் அ.சா.கு.எண்.67089/மை.ம.ஆபி/2019, நாள் 31.12.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2691 (இரண்டாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம்,
சென்னை–600 079. (அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–600005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நில நிருவாக ஆணையர், சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர்/ ஆணையர், நகர்ப்புற நிலஉச்சவரம்பு(ம)
நகர்ப்புற நிலவரித்துறை, சென்னை–600 005.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–600 005.
ஆணையர், குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு, சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம்.
சார்நிலை கருவூல அலுவலர், ஆற்காடு.
கணக்காயர் (A&E), சென்னை–600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–600 018. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை),சென்னை–600 018.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–600 009.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–600 009.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–600 002.
அனைத்துத் துறை தலைவர்கள்/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–600 009.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–600 015.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம்,
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–600 090.

<u>நகல்:</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர், (வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை)
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–600 009.

நிதித் (வ.செ.பொது—I/ வ.செ.பொது—II/ வருவாய்/கக—
3/கூஉ(ம)நுபா/ பொதுப்பணி- I/மை.மஆபி) துறை, சென்னை— 600 009.
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை—600 009.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/12/19

பிரிவு அலுவலர்

## இணைப்பு -I

**அரசாணை(நிலை) எண்.481, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 31.12.2019**

**<u>கலவை புதிய வருவாய் வட்டத்திற்கான பணியிட விவரங்கள்</u>**

கலவை புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் ஆற்காடு வட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய மற்றும் புதிய வட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட வேண்டிய மற்றும் புதியதாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் ஆகியவற்றின் விவரம் பொதுவான பணியாளர் மாதிரி (Generalised Staff Pattern ) ன்படி பின்வருமாறு தரப்படுகிறது.

**கலவை வட்டம் புதியதாக உருவாகுவது தொடர்பாக தோற்றுவிக்கப்பட் வேண்டிய பணியிட விவரங்கள்**

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் / தற்காலிகம் | ஆற்காடு | | | கலவை வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள் | கலவை வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | கலவை வட்டத்திற்கு அனுமதிக்க பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தற்போதுள்ள பணியிடட்க்ள் | நிறுத்தி வைக்கப் பட வேண்டிய பணியிடங்கள் | மிகைப் பணியிடங்கள் | | | |
| அ | பொதுப்பிரிவு | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (கூ.த.து.வ உள்பட) | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 3 | மண்டலத் துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 2 (1+1a) | 1 | 1 | 0 | 0 | 0 |
| 4 | உதவியாளர் | நிரந்தரம் | 5 | 3 | 2 | 2 | 0 | 2 |
| 5 | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிரந்தரம் | 5 | 3 | 2 | 2 | 0 | 2 |
| 6 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 5 (4+1b) | 0 | 5 | 0 | 0 | 0 |
| 7 | தட்டச்சர் | நிரந்தரம் | 2 | 1 | 1 | 1 | 0 | 1 |
| 8 | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 9 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 9 | 5 | 4 | 4 | 0 | 4 |
| 11 | இரவு காவலர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 12 | மசால்ஜி | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| | மொத்தம் | | 34 | 19 | 15 | 9 | 6 | 15 |
| ஆ | சமூகப்பாதுகாப்பு திட்டம் | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 2 | உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 4 | தட்டச்சர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 5 | பதிவறை எழுத்தர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 6 | ஈப்பு ஓட்டுநர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 7 | அலுவலக உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |

//த.பி.பா.//

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | | 7 | 7 | 0 | 0 | 7 | 7 |
| இ | தேர்தல் பிரிவு | | | | | | | |
| 1 | தேர்தல் துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1a | 0 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| | மொத்தம் | | 2 | 2 | 0 | 1 | 1 | 2 |
| ஈ | வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலையில்) | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர்கள் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 3 | தனி வருவாய் ஆய்வாளர் (இநிஉ நிலை) | தற்காலிகம் | 2 | 1 | 1 | 1 | 0 | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1b | 0 | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| | மொத்தம் | | 6 | 5 | 1 | 2 | 3 | 5 |
| உ | நில அளவைப்பிரிவு | | | | | | | |
| 1 | மண்டல துணை ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 3 | வட்ட ஆவண வரைவாளர் | நிரந்தரம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 4 | குறுவட்ட நில அளவர் | நிரந்தரம் | 5 | 3 | 2 | 2 | 0 | 2 |
| 5 | முதுநிலை வரைவாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| 6 | புல உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 0 | 1 | 1 |
| | மொத்தம் | | 10 | 7 | 3 | 2 | 4 | 6 |

மொத்தப்பணியிடங்கள்

| | பணியிடங்கள் | நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மிகைப் பணியிடங்கள் | மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள் | தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பொது | 34 | 19 | 15 | 9 | 6 | 15 |
| சமூகம் | 7 | 7 | 0 | 0 | 7 | 7 |
| தேர்தல் | 2 | 2 | 0 | 1 | 1 | 2 |
| வட்ட வழங்கல் | 6 | 5 | 1 | 2 | 3 | 5 |
| நில அளவை | 10 | 7 | 3 | 2 | 4 | 6 |
| மொத்தம் | 59 | 40 | 19 | 14 | 21 | 35 |

| | |
|---|---|
| மொத்தம் பணியிடங்கள் | 59 |
| நிறுத்தி வைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | 40 |
| மிகைப் பணியிடங்கள் | 19 |

| | |
|---|---|
| மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள் | 14 |
| தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | 21 |
| கலவை மொத்தம் பணியிடங்கள் | 35 |
| சரண் செய்யப்பட வேண்டியவை (இளநிலை உதவியாளர் பொது பிரிவிலிருந்து) | 4 |

**1 a** ஆற்காடு வட்ட பொதுப்பிரிவில் மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்ட **1** மண்டல துணை வட்டாட்சியர் பணியிடத்தை புதிய கலவை வருவாய் வட்ட தேர்தல் பிரிவிற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

1 b ஆற்காடு வட்ட பொதுப்பிரிவில் மிகைப்பணியிடங்களாக கண்டறியப்பட்ட 5 இளநிலை உதவியாளர் பணியிடங்களில் உள்ள 1 பணியிடத்தை புதிய கலவை வருவாய் வட்டத்தின் வட்ட வழங்கல் பிரிவிற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - II

**அரசாணை (நிலை) எண்.481, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 31.12.2019**
**கலவை புதிய வருவாய் வட்டத்திற்கு புதியதாக ஒப்பளிக்கப்படும் பணியிடங்கள்**

| வ.எண். | பணியிடங்களின் பெயர் | ஊதிய விகிதம் (in pay revised scale) | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ | பொதுப்பிரிவு | | |
| 1 | வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/- நிலை-20, ரூ.37,700/- ரூ.1,19,500/- | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/- நிலை-18, ரூ.36,900/- ரூ.1,16,600/- | 1 |
| 3 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/- நிலை-2, ரூ.15,900/- ரூ.50,400/- | 1 |
| 4 | ஈப்பு ஓட்டுநர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| 5 | இரவுக்காவலர் | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| 6 | மசால்சி (Masalchi) | அரசாணை (நிலை) எண்.49, ப.ம.நி.சீ. (F) துறை, நாள் 14.05.2002-ன்படி | 1 |
| ஆ | **சமூக பாதுகாப்புத்திட்டம்** | | |
| 7 | தனி வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.37,700/- நிலை-20, ரூ.37,700/- ரூ.1,19,500/- | 1 |
| 8 | உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/- நிலை-10, ரூ.20,600/- ரூ.65,500/- | 1 |
| 9 | இளநிலை உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/- நிலை-8, ரூ.19,500/- ரூ.62,000/- | 1 |
| 10 | தட்டச்சர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.19,500/- நிலை-8, ரூ.19,500/- ரூ.62,000/- | 1 |
| 11 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 1 |
| 12 | பதிவறை எழுத்தர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,900/- நிலை-2, ரூ.15,900/- ரூ.50,400/- | 1 |
| 13 | ஈப்பு ஓட்டுநர் | TEXCO பரிந்துரையின் அடிப்படையில் | 1 |
| இ | **தேர்தல் பிரிவு** | | |
| 14 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/- நிலை-10, ரூ.20,600/- ரூ.65,500/- | 1 |
| ஈ | **வட்ட வழங்கல் பிரிவு** | | |
| 15 | துணை வட்டாட்சியர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.36,900/- நிலை-18, ரூ.36,900/- ரூ.1,16,600/- | 1 |
| 16 | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.20,600/- நிலை-10, ரூ.20,600/- ரூ.65,500/- | 1 |
| 17 | அலுவலக உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 1 |
| உ | **நில அளவைப்பிரிவு** | | |
| 18 | வட்ட துணை ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,600/- நிலை-12, ரூ.35,600/- ரூ.1,12,800/- | 1 |
| 19 | வட்ட சார் ஆய்வாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/- நிலை-11, ரூ.35,400/- ரூ.1,12,400/- | 1 |
| 20 | முதுநிலை வரைவாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.35,400/- நிலை-11, ரூ.35,400/- ரூ.1,12,400/- | 1 |
| 21 | புல உதவியாளர் | குறைந்த பட்சம் ஊதியம் ரூ.15,700/- நிலை-1, ரூ.15,700/- ரூ.50,000/- | 1 |
| | மொத்தம் | | 21 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - III

அரசாணை (நிலை) எண்.481, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 31.12.2019

அ) தொடரும் செலவினங்கள்

| வ. எண். | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (தோராயமாக ஆண்டொன்றுக்கு கணக்கீட்டுத்தாளில் உள்ளபடி) | 32,39,650 |
| 2. | அலுவலக கட்டிட வாடகை | பொதுப் பணித்துறையின் இறுதி பரிந்துரையின் பேரில் நிர்ணயம் செய்யப்படும் |
| 3. | மின்சாரக் கட்டணம் | 72,000 |
| 4. | எரிபொருள் (டீசல்) (2 வாகனங்களுக்கு) | 1,92,000 |
| 5. | தொலைபேசி கட்டணம் | 24,000 |
| 6. | சில்லரை செலவினம் | 10,000 |
| | **மொத்தம்** | **35,37,650** |

ஆ) தொடராச் செலவினங்கள்

| வ.எண். | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | தளவாடங்கள் | 4,00,000 |
| 2. | ஈப்பு–2 | 14,00,000 |
| 3. | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 4. | கணினி | 1,50,000 |
| 5. | பிரிண்டர் (அச்சுப் பதிப்பு இயந்திரம்) | 30,000 |
| 6. | ஜெராக்ஸ் இயந்திரம் | 65,000 |
| 7. | பேக்ஸ் இயந்திரம் (தொலையச்சு இயந்திரம்) | 10,000 |
| 8. | குளிர்சாதனம் | 25,000 |
| 9. | தீயணைப்பான் | 10,000 |
| | **மொத்தம்** | **20,96,000** |

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - IV

**அரசாணை (நிலை) எண்.481, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 31.12.2019**

**ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | ஆற்காடு | கலவை |
|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | ஆற்காடு | கலவை |
| 2 | பரப்பளவு (ச.கி.மீ) | 404.01 | 207.26 |
| 3 | மககள் தொகை | 177150 | 78773 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை |
| 5 | சட்டமன்றத் தொகுதியின் பெயர் | ஆற்காடு (பகுதி) | ஆற்காடு (பகுதி) |
| 6 | பாராளுமன்றத் தொகுதியின் பெயர் | அரக்கோணம் (பகுதி) | அரக்கோணம் (பகுதி) |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | 01 (ஆற்காடு) | 01 (ஆற்காடு) |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 01. ஆற்காடு<br>02.திமிரி | 01 திமிரி |
| 9 | டவுன் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை (தேர்வு நிலை பேரூராட்சி) | 01.கலவை<br>02. திமிரி | 01.கலவை |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 01. ஆற்காடு<br>02.திமிரி 03.புதுப்பாடி | 01.கலவை<br>02.மாம்பாக்கம் |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 52 | 50 |
| 12 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 42 | 37 |
| 13 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் பெயர் | வாழப்பந்தல்<br>(39 கி.மீ) | வாழப்பந்தல்<br>(20 கி.மீ) |

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - V

**அரசாணை (நிலை) எண்.481, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 31.12.2019**

**அறிவிக்கை – I**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் இராணிபேட்டை மாவட்டத்திலுள்ள ஆற்காடு வருவாய் வட்டத்தைப் பிரித்து 2019–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31–ஆம் நாளிலிருந்து கலவையை தலைமையிடமாகக் கொண்டு, கலவை புதிய வருவாய் வட்டம் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

| வ.எண் | வட்டம் | குறுவட்டத்தின் பெயர் | வ.எண் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கலவை | கலவை குறுவட்டம் | 1 | 75.சிறுவிடாகம் |
| | | | 2 | 76.கலவை |
| | | | 3 | 86.மேல்நெல்லி |
| | | | 4 | 66.மேல்நேத்தப்பாக்கம் |
| | | | 5 | 72.சென்னலேரி |
| | | | 6 | 73.பரிக்கல்பட்டு |
| | | | 7 | 69.அகரம் |
| | | | 8 | 77.கலவைபுத்தூர் |
| | | | 9 | 84.கோடாலி |
| | | | 10 | 83.சிட்டந்தாங்கல் |
| | | | 11 | 85.செம்பாக்கம் |
| | | | 12 | 28.கீழ்பாடி |
| | | | 13 | 30.பழையனூர் |
| | | | 14 | 70.அல்லாளச்சேரி |
| | | | 15 | 71.நாகலேரி |
| | | | 16 | 26.கனியனூர் |
| | | | 17 | 74.சென்னசமுத்திரம் |
| | | | 18 | 27.மருதமங்கலம் |
| | | | 19 | 29.குண்டலேரி |
| | | | 20 | 24.மழையூர் |
| | | | 21 | 25.செய்யாத்துவண்ணம் |
| | | | 22 | 67.பிண்டித்தாங்கல் |
| | | | 23 | 68.வெள்ளம்பி |
| 2 | | மாம்பாக்கம் குறுவட்டம் | 24 | 94.பாரியமங்கலம் |
| | | | 25 | 93.பென்னகர் |
| | | | 26 | 80.மேல்புலம் |
| | | | 27 | 81.வேம்பி |
| | | | 28 | 82.நல்லூர் |
| | | | 29 | 22.செங்கனாவரம் |
| | | | 30 | 23.குட்டியம் |
| | | | 31 | 96.மாம்பாக்கம் |
| | | | 32 | 98.வாழப்பந்தல் |
| | | | 33 | 99.மேலப்பழந்தை |
| | | | 34 | 100.சொரையூர் |
| | | | 35 | 102.பொன்னம்பலம் |
| | | | 36 | 101.ஆரூர் |
| | | | 37 | 87.இருங்கூர் |
| | | | 38 | 90.மருதம் |

//த.பி.பா.//

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 39 | 91.பாலி |
| | | | 40 | 92.தோனிமேடு |
| | | | 41 | 95.குப்புடிசாத்தம் |
| | | | 42 | 97.மேல்புதுப்பாக்கம் |
| | | | 43 | 88.தட்டச்சேரி |
| | | | 44 | 89.தென்மணப்பாக்கம் |
| | | | 45 | 18.நங்கமங்கலம் |
| | | | 46 | 19.வளையாத்தூர் 1&2 |
| | | | 47 | 20.பெருமாந்தாங்கல் |
| | | | 48 | 21.ஆயிரமங்கலம் |
| | | | 49 | 78.பிண்ணத்தாங்கல் |
| | | | 50 | 79.அத்தியானம் |

கலவை புதிய வருவாய் வட்டத்தில் உள்ளடக்கும் கலவை மற்றும் மாம்பாக்கம் ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது ஆற்காடு வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் 2019–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31–ஆம் நாளிலிருந்து கலவை வட்டாட்சியரால் கையாளப்படும்.

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.

## அறிவிக்கை–II

ஆற்காடு வருவாய் வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு முன் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| குறுவட்டத்தின் பெயர் | வ.எண். | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| திமிரி குறுவட்டம் | 1. | 1. வெங்கடாபுரம் |
| | 2. | 2.குப்பம் |
| | 3. | 3. புங்கனூர் |
| | 4. | 4. வரகூர் |
| | 5. | 5.பட்டணம் |
| | 6. | 6. காவனூர் |
| | 7. | 7. ஆனைமல்லூர் |
| | 8. | 8. மேல்நாயக்கன்பாளையம் |
| | 9. | 9. பாடி |
| | 10. | 10. நம்பரை |
| | 11. | 11. துர்கம் |
| | 12. | 12.மேலத்தாங்கல் |
| | 13. | 13. பரதராமி |
| | 14. | 14. பாளையம் |
| | 15. | 15. மோசூர் |
| | 16. | 16. வணக்கம்பாடி |
| | 17. | 17. தாமரைப்பாக்கம் |
| | 18. | 31. திமிரி |
| | 19. | 32. மருத்துவாம்பாடி |
| | 20. | 33. விலாரி |
| | 21. | 34. விளாப்பாக்கம் |
| கலவை குறுவட்டம் | 22. | 75.சிறுவிடாகம் |
| | 23. | 76.கலவை |
| | 24. | 86.மேல்நெல்லி |
| | 25. | 66.மேல்நேத்தப்பாக்கம் |
| | 26. | 72.சென்னலேரி |
| | 27. | 73.பரிக்கல்பட்டு |
| | 28. | 69.அகரம் |
| | 29. | 77.கலவைபுத்தூர் |
| | 30. | 84.கோடாலி |
| | 31. | 83.சிட்டந்தாங்கல் |
| | 32. | 85.செம்பாக்கம் |
| | 33. | 28.கீழ்பாடி |
| | 34. | 30.பழையனூர் |
| | 35. | 70.அல்லாளச்சேரி |
| | 36. | 71.நாகலேரி |
| | 37. | 26.கனியனூர் |
| | 38. | 74.சென்னசமுத்திரம் |
| | 39. | 27.மருதமங்கலம் |
| | 40. | 29.குண்டலேரி |
| | 41. | 24.மழையூர் |
| | 42. | 25.செய்யாத்துவண்ணம் |
| | 43. | 67.பிண்டித்தாங்கல் |
| | 44. | 68.வெள்ளம்பி |
| மாம்பாக்கம் குறுவட்டம் | 45. | 94.பாரியமங்கலம் |
| | 46. | 93.பென்னகர் |
| | 47. | 80.மேல்புலம் |
| | 48. | 81.வேம்பி |
| | 49. | 82.நல்லூர் |

//த.பி.பா.//

| | | |
|---|---|---|
| | 50. | 22.செங்கனாவரம் |
| | 51. | 23.குட்டியம் |
| | 52. | 96.மாம்பாக்கம் |
| | 53. | 98.வாழப்பந்தல் |
| | 54. | 99.மேலப்பழந்தை |
| | 55. | 100.சொரையூர் |
| | 56. | 102.பொன்னம்பலம் |
| | 57. | 101.ஆரூர் |
| | 58. | 87.இருங்கூர் |
| | 59. | 90.மருதம் |
| | 60. | 91.பாலி |
| | 61. | 92.தோனிமேடு |
| | 62. | 95.குப்படிசாத்தம் |
| | 63. | 97.மேல்புதுப்பாக்கம் |
| | 64. | 88.தட்டச்சேரி |
| | 65. | 89.தென்மணப்பாக்கம் |
| | 66. | 18.நங்கமங்கலம் |
| | 67. | 19.வளையாத்தூர் 1&2 |
| | 68. | 20.பெருமாந்தாங்கல் |
| | 69. | 21.ஆயிரமங்கலம் |
| | 70. | 78.பிண்ணத்தாங்கல் |
| | 71. | 79.அத்தியானம் |
| ஆற்காடு குறுவட்டம் | 72. | 35. சாத்தூர் 1 மற்றும் 2 |
| | 73. | 36. தாஜ்புரா |
| | 74. | 37. ஆற்காடு |
| | 75. | 38. முப்பதுவெட்டி |
| | 76 | 39. பூங்கோடு |
| | 77 | 40. மாங்காடு |
| | 78 | 41. சா்வந்தாங்கல் |
| | 79 | 42. குஞ்சரப்பந்தாங்கல் |
| | 80 | 47. லாடவரம் |
| | 81 | 43. புன்னப்பாடி |
| | 82 | 44. அத்தித்தாங்கல் |
| புதுப்பாடி குறுவட்டம் | 83 | 48. புதுப்பாடி |
| | 84 | 49. கிளாம்பாடி |
| | 85 | 58. முள்ளுவாடி |
| | 86 | 50. குக்குண்டி |
| | 87 | 60. பாப்பேரி |
| | 88 | 61. கீராம்பாடி |
| | 89 | 59. கடப்பந்தாங்கல் |
| | 90 | 54. வளவனூர் |
| | 91 | 45. ஒழலை |
| | 92 | 65. செம்பேடு |
| | 93 | 46. கரிவேடு |
| | 94 | 64. கே.வேளூர் |
| | 95 | 55. அரும்பாக்கம் |
| | 96 | 56. குருமுடித்தாங்கல் |
| | 97 | 62. கிளாத்தாங்கல் |
| | 98 | 63. கரிக்கந்தாங்கல் |
| | 99 | 51. சக்கரமல்லூர் 1 மற்றும் 2 |
| | 100 | 52. பெருங்கால்மேடு |
| | 101 | 53. எசையனூர் |
| | 102 | 57. மேச்சேரி |

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண்.481, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 31.12.2019

அறிவிக்கை–III

ஆற்காடு வருவாய் வட்டத்தில் வட்டப்பிரிவினைக்கு பின் உள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரம்

| குறுவட்டத்தின் பெயர் | வ.எண். | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| திமிரி குறுவட்டம் | 1 | 1. வெங்கடாபுரம் |
| | 2 | 2.குப்பம் |
| | 3 | 3. புங்கனூர் |
| | 4 | 4. வரகூர் |
| | 5 | 5.பட்டணம் |
| | 6 | 6. காவனூர் |
| | 7 | 7. ஆனைமல்லூர் |
| | 8 | 8. மேல்நாயக்கன்பாளையம் |
| | 9 | 9. பாடி |
| | 10 | 10. நம்பரை |
| | 11 | 11. துர்கம் |
| | 12 | 12.மேலத்தாங்கல் |
| | 13 | 13. பரதராமி |
| | 14 | 14. பாளையம் |
| | 15 | 15. மோசூர் |
| | 16 | 16. வணக்கம்பாடி |
| | 17 | 17. தாமரைப்பாக்கம் |
| | 18 | 31. திமிரி |
| | 19 | 32. மருத்துவாம்பாடி |
| | 20 | 33. விலாரி |
| | 21 | 34. விளாப்பாக்கம் |
| ஆற்காடு குறுவட்டம் | 22 | 35. சாத்தூர் 1 மற்றும் 2 |
| | 23 | 36. தாஜ்புரா |
| | 24 | 37. ஆற்காடு |
| | 25 | 38. முப்பதுவெட்டி |
| | 26 | 39. பூங்கோடு |
| | 27 | 40. மாங்காடு |
| | 28 | 41. சர்வந்தாங்கல் |
| | 29 | 42. குஞ்சரப்பந்தாங்கல் |
| | 30 | 47. லாடவரம் |
| | 31 | 43. புன்னப்பாடி |
| | 32 | 44. அத்தித்தாங்கல் |
| புதுப்பாடி குறுவட்டம் | 33 | 48. புதுப்பாடி |
| | 34 | 49. கிளாம்பாடி |
| | 35 | 58. முள்ளுவாடி |
| | 36 | 50. குக்குண்டி |
| | 37 | 60. பாப்பேரி |
| | 38 | 61. கீராம்பாடி |
| | 39 | 59. கடப்பந்தாங்கல் |
| | 40 | 54. வளவனூர் |
| | 41 | 45. ஒழலை |
| | 42 | 65. செம்பேடு |
| | 43 | 46. கரிவேடு |
| | 44 | 64. கே.வேளூர் |
| | 45 | 55. அரும்பாக்கம் |
| | 46 | 56. குருமுடித்தாங்கல் |
| | 47 | 62. கிளாத்தாங்கல் |
| | 48 | 63. கரிக்கந்தாங்கல் |
| | 49 | 51. சக்கரமல்லூர் 1 மற்றும் 2 |
| | 50 | 52. பெருங்கால்மேடு |
| | 51 | 53. எசையனூர் |
| | 52 | 57. மேச்சேரி |

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

31/12/19

பிரிவு அலுவலர்.